



## வேளாண்மை - உழவர் நலத்துறை

# வேளாண்மைப் பொறியியல் துறை







## வேளாண்மைப் பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் 2025-26









## வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத் திட்டம்



பல்வேறு வேளாண் இயந்திரங்களை தனிப்பட்ட விவசாயிகள் வாங்குவதற்கும், வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்கும் மானியம் வழங்குதல்.

**தனிப்பட்ட இயந்திரங்கள்/கருவிகள்**

- 70% – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
- 50%–ஆதிதிராவிடர், பழங்குடியினர். சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு.
- 40% – இதர விவசாயிகளுக்கு

**கிராம அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையம்**

- விவசாய கூட்டுறவு சங்கங்கள்
- **மானியம் :** 80% (அ) அதிகபட்சமாக ரூ.8 இலட்சம்

## நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், விசைக் களையெடுப்பான் வாங்கிட சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதல் 10 %மானியம்

சிறு, குறு விவசாயிகளுக்கு நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம் விசைக் களையெடுப்பான் வாங்கிட நடைமுறையில் உள்ள 50% மானியத்துடன், கூடுதலாக 10% சேர்த்து, மொத்தம் 60% மானியம் வழங்கப்படுகிறது.



## வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல்



வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை விவசாயிகள் வாங்குவதற்கு மானியம் வழங்குதல்.

**மானியம்**

- 70% – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
- 50% – ஆதிதிராவிடர், பழங்குடியினர். சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு
- 40% – இதர விவசாயிகளுக்கு

## தொழில் முனைவோர் வாய்ப்புகளுக்கான வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

- 500 இளைஞர்களுக்கு 5 நாட்கள் கட்டணமில்லா பயிற்சி
- வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொழில்முனைவோராக உருவாக்குவதற்கான பயிற்சி, மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகள், வேளாண்மையில் ஆர்வமுடையவர்களுக்கு சென்னையிலுள்ள மாநில வேளாண் இயந்திர தகவல் மையத்தில் வழங்குதல்.

விண்ணப்பிக்க : https://forms.gle/W8P33nqNpnGrsgkp9



## இ-வாடகை செயலி



வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலங்களுக்கு செல்லாமலே தங்கள் வீடு அல்லது வயல்களிலிருந்தே உழவர் செயலியிலுள்ள ‘இ-வாடகை செயலி’ என்னும் தெரிவின் மூலம் அல்லது https://mts.aed.tn.gov.in/evaadagai/ என்ற இணைய தள முகவரி மூலமும் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## திறந்த வெளி பாசனக் கிணறுகளை புனரமைத்தல்



சுற்றுச்சுவர் இல்லாமல் அல்லது சுற்றுச்சுவர் சேதமடைந்து, உடைந்த நிலையில், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், பாதுகாப்பு இல்லாமலும் மற்றும் முறையான பராமரிப்பு இன்றி தூர்ந்து போய் அவற்றின் செயல்திறனை இழந்து வரும் கிணறுகளை புனரமைத்து, அவற்றின் பாசனத் திறனை மேம்படுத்திடும் பொருட்டு திறந்தவெளி கிணறுகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைத்துத் தருதல்.

**மானியம்**

தனிப்பட்ட விவசாயிகளுக்கு 50% அல்லது அதிகபட்சம் ரூ.2.5 இலட்சம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

## பயிர் சாகுபடியில் விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்குதல்

- நெல், மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை மற்றும் உளுந்து பயிர்களின் சாகுபடியில் விதை விதைப்பு முதல் அறுவடை வரை பணிகளை இயந்திரமயமாக்குதல் குறித்து, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் 1550 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகளின் நிலங்களில் 100% மானியத்தில், ஒரு விவசாயிக்கு தலா 1 ஏக்கர் வீதம் ‘வேளாண் தொழில்நுட்ப முனைவோர்’ மூலம் உழவர்களுக்குச் செயல் விளக்கங்கள் காண்பித்தல்.
- இடுபொருட்களான விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேலையாட்கள் செலவு ஆகியவை சம்பந்தப்பட்ட விவசாயியைச் சார்ந்தது.



## முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்



**மொத்த விலை**

♦ 5 HP - ரூ.3,14,088/- ♦ 7.5 HP - ரூ.4,42,113/- ♦ 10 HP - ரூ.5,41,347/-

**மானியம்**

- 80% – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
- 70% – பொதுப் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் மற்றும் ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த இதர விவசாயிகள்
- 60% – இதர விவசாயிகளுக்கு

## சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல்

வேளாண் விளை பொருட்களை உலர வைத்திட, பசுமை குடில் வகையிலான, 400 முதல் 1,000 சதுர அடி பரப்பளவு கொண்ட பாலிகார்பனேட் தகடுகளை கொண்ட சூரியகூடார உலர்த்திகள் அமைத்தல்.

**மானியம்**

- 70% – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
- 50% – ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு
- 40% – இதர விவசாயிகளுக்கு



## சூரிய சக்தி மின்வேலிகள் மானியத்தில் அமைத்தல்



விவசாயிகளின் விளை நிலங்களில் உள்ள பயிர்களை சேதப்படுத்தும் விலங்குகளிடமிருந்து பாதுகாக்க, மானிய விலையில் சூரிய சக்தி மின்வேலி அமைத்தல்.

**மானியம்**

- 70% – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு
- 50% – இதர விவசாயிகளுக்கு

## பண்ணைக்குட்டைகள் அமைத்தல்



- மழை நீரினை விவசாய நிலங்களிலேயே சேமித்திட, வறட்சி காலங்களில் பயிர்களுக்கு உயிர்ப்பாசனம் வழங்கிட விவசாய நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.
- மானியம் - 100 %

## திறன் மேம்பாட்டுப் பயிற்சி

### டிராக்டர் ஓட்டுவதற்கான பயிற்சி (Tractor Operator Training)

- 22 நாட்கள் பயிற்சி
- கிராமப்புற இளைஞர்களுக்கு, டிராக்டர் இயக்குவதற்கான பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### வேளாண் இயந்திரங்கள் செயல்விளக்கப் பயிற்சி (Agricultural Machinery Demonstrator Training)

- 16 நாட்கள் பயிற்சி

இப்பயிற்சிகள் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான ஆறு இயந்திர கலப்பை பணிமனைகள் மூலம் செயல்படுத்தப்படும்.



## கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்



- விவசாய தொகுப்புகளுக்கு நீர் ஆதாரத்தை உருவாக்குதல்.
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினை சார்ந்த தனிப்பட்ட விவசாயிகளுக்கு நீர் ஆதாரத்தை உருவாக்குதல்.
- பண்ணைக்குட்டைகள் அமைத்தல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசன குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களை தூர்வாரி மேம்படுத்துதல்.
- **மானியம்** - அனைத்து இனங்களுக்கும் 100% மானியம்

## மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள்

பழைய மின்மோட்டார் பம்புசெட்டுகளை புதிதாக மாற்றுவதற்கு அல்லது புதியதாக உருவாக்கப்படும் கிணறுகளுக்கான புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகள் அமைப்பதற்கு மானியம் வழங்குதல்.

**மானியம்**

4 ஸ்டார் தரத்திற்கும் குறைவில்லாத மின்மோட்டார் பம்புசெட்டு வாங்கிட, அதன் மொத்த விலையில் 50% அல்லது ரூ.15,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.



## தொடர்புக்கு

### மேலும் விவரங்களுக்கு

http://aed.tn.gov.in/

வேளாண்மைப் பொறியியல் துறையின்
சம்பந்தப்பட்ட மாவட்ட செயற் பொறியாளர் (வே.பொ),
உதவி செயற் பொறியாளர் (வே.பொ) மற்றும்
வட்டார அளவிலான உதவி பொறியாளர் (வே.பொ) /
இளநிலைப் பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்

### உழவர் செயலி